# நவம்பர் – 23 – வெள்ளி

**புனித முதலாம் கிளமென்ட் திருதந்தை**

**ஏனெனில், உம் ஒழுங்குமறைகள் எனக்கு இன்பம் தருகின்றன: திபா. 119:24**

## முதல் வாசகம் : திருவெளிப்பாடு 10 : 8 - 11

சகோதர சகோதரிகளே! விண்ணகத்திலிருந்து நான் கேட்ட குரல் என்னிடம் மீண்டும் பேசி, ”கடலின் மீதும்இ நிலத்தின்மீதும் நிற்கின்ற வானதூதரின் கையில் உள்ள பிரிக்கப்பட்ட சுருளேட்டை நீ போய் வாங்கிக்கொள்” என்றது. நானும் அந்த வானதூதரிடம் சென்று, அந்தச் சிற்றேட்டை என்னிடம் தரும்படி கேட்டேன். அவரோ, ”இதை எடுத்துத் தின்றுவிடு இது உன் வயிற்றில் கசக்கும், ஆனால் வாயில் தேனைப்போல் இனிக்கும்” என்று என்னிடம் சொன்னார். உடனே வானதூதரின் கையிலிருந்து அந்தச் சிற்றேட்டை எடுத்துத் தின்றேன். அது என் வாயில் தேனைப் போல் இனித்தது. ஆனால் அதைத் தின்றபொழுது என் வயிற்றில் கசந்தது. ”பல்வேறு மக்களினத்தார், நாட்டினர், மொழியினர், மன்னர்பற்றி நீ மீண்டும் இறைவாக்குரைக்க வேண்டும்” என்று எனக்குச் சொல்லப்பட்டது.

**பதில்பாடல் :** உம் சொற்கள் என் நாவுக்கு எத்துனை இனிமையானவை

## நற்செய்தி : லூக்கா 19 : 45 - 48

அக்காலத்தில்இயேசு கோவிலுக்குள் சென்று அங்கு விற்பனை செய்து கொண்டிருந்தோரை வெளியே துரத்தத் தொடங்கினார். அவர்களிடம், ”என் இல்லம் இறைவேண்டலின் வீடு” என்று மறைநூலில் எழுதியுள்ளதே் ஆனால் நீங்கள் இதைக் கள்வர் குகையாக்கினீர்கள்” என்று கூறினார். இயேசு ஒவ்வொரு நாளும் கோவிலில் கற்பித்து வந்தார். தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞர்களும் மக்களின் தலைவர்களும் அவரை ஒழித்துவிட வழி தேடினார்கள். ஆனால் என்ன செய்வது என்று யாருக்கும் தெரியவில்லை. ஏனென்றால் மக்கள் அனைவரும் அவர் போதனையைக் கேட்டு அவரையே பற்றிக்கொண்டிருந்தனர்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள் நாங்கள் எவ்வாறு தூயவராக இருக்கின்றோமோ அதேபோன்று நீங்களும் தூய்மையாக இருக்கவேண்டுமென்று இறைமகன் இயேசு விரும்புகின்றார். அவ்வாறு தூயவராக வாழ்ந்தால் எமது உள்ளமாகிய இல்லத்தில் அவர் வந்து தங்குவார். அன்று கோவிலில் புறா விற்போர், பணம் மாற்றுவோரைக்கண்டு கோபங் கொண்டவராக சாட்டையால் அடித்து துரத்திவிடுகிறார். ஏனெனில் தனது தந்தை குடிகொண்டுள்ள இல்லம் எப்போதும் தூய்மையாக இருக்கவேண்டுமென்பதை தெளிவபடுத்துகிறார். இன்று எமது உள்ளத்தில் தீய எண்ணங்கள், தீய இச்சைகள், கெட்ட கெட்ட வார்த்தைகள் பேசுதல் இவ்வாறானவை நிறைந்து கிடங்கின்றன இவை யாவும் எமது உள்ளத்தை விட்டு எடுபட வேண்டும். மாறாக மீண்டும் மீண்டும் கறைபிடித்திக்கொண்டே இருக்கின்றோம். அவ்வாறு வாழ்ந்தால் எவ்வாறு எமது உள்ளத்தில் வந்து தங்குவார். நாங்கள் கோவிலுக்கு செல்கின்றோம், வழிபாடுகள் செய்கின்றோமே தவிர உண்மையுடன் கிறிஸ்து இயேசு அப்பவடிவில் ஆலயத்தில் வீற்றிருக்கின்றார் என்பதை மறந்து விடுகின்றோம். திருப்பலியில் நற்கருணை பெறும் பொழுது தகுந்த ஆயத்தத்துடன் பெறத் தவறி விடுகின்றோம். இவற்றை உணர்ந்து தூய உள்ளத்துடன் வாழ மனம் வருந்தி மன்னிப்பு வேண்டி எமது பணி மென்மேலும் சிறக்க இறைவனிடம் வரம் வேண்டுவோம்.